# பட்டயம்


மலர் - 06 ஜூலை - 2010 இதழ் - 9

Date of Issue : 01-07-2010

Place of Publication : 86 / 222H, Main Road,
Panagudi - 627 109.
Tirunelveli District, Tamil Nadu.

Volume : 6

Issue : 9 Price Per Copy : Rs.5.00





THE LORD IS MY SHEPHERD;
I SHALL NOT WANT (PSALM 23:1)

தாழ்ச்சி யாவும் மாற்றும் கர்த்தாவே!

## ஓசன்னா ஆலய வெளியீடு

www.hosannahchurch.org

"இந்த ஆலயத்தை மகிமையினால் நிறையப் பண்ணுவேன்" (ஆகாய்2:7)

# ஆசிரியர்கூடிதம்

**கர்த்தருடைய பிள்ளைகளே!**

ஒரு கடைசி காலத்துக்குள் இருக்கிறோம். இக்காலத்தில் கர்த்தரை ஏற்றுக் கொண்ட ஜனங்கள் உலக சிநேகமுள்ள ஜனங்களைக் கண்டு அவர்களைப் போல உலகத்துக்கு ஒத்த வேஷம் போடுகிறவர்களாக மாறுவது வேதனைக்குரிய விஷயமாகும்.

கர்த்தரை ஏற்றுக்கொண்ட ஜனம் முதலாவது வாழ்விலும் தாழ்விலும் அவர் மேலுள்ள அன்பில் வளர வேண்டும்.

கர்த்தரை ஏற்றுக் கொண்ட ஜனம் இரண்டாவது வாழ்விலும் தாழ்விலும் மனுஷன் மேலுள்ள அன்பில் வளரவேண்டும்

மூன்றாவதாக உலக சிநேகம் உள்ள ஜனங்களைக் கண்டு பொறாமைப்படக் கூடாது.

நான்காவதாக உலக சிநேகம் உள்ள ஜனங்களைக் கண்டு அவர்களைப் போல உல்லாசம், ஆடம்பரம், சுகபோகம், தன்னலம், இச்சை, களியாட்டுகளில் சிக்கக்கூடாது.

ஐந்தாவது கர்த்தர் இயேசுவின் பாரம் என்னவென்று உணர்ந்து அந்த நுகத்தை ஏற்று செயல்பட வேண்டும்.

ஆறாவதாக கர்த்தர் இயேசுவின் தயவுள்ள சித்தம் நம் வாழ்வில் என்னவென்று பகுத்துணர்ந்து அதை எந்த நிலமையிலும் நிறைவேற்றிட பிரயாசப்பட வேண்டும்.

ஏழாவதாக நம்முடைய நாமத்தை அல்ல நம்மைப் படைத்த இயேசுவின் நாமத்தை உயர்த்த, மகிமைப்படுத்த எல்லா முயற்சிகளும் ஏறெடுக்க வேண்டும்.

எட்டாவதாக அவர் வருகையை மகிழ்வோடு எதிர்பார்க்க வேண்டும்.

அப்போது கர்த்தர் உங்களை சீயோனிருந்து ஆசீர்வதிப்பார்.

ஆமென்.

# 10,000 சிறு ஜெபங்கள்

1. விரோதமாய் எழும்பும் அகங்காரிகளுக்குத் தப்புவியும் கர்த்தாவே! - சங் 86/14
2. பொய்களைப் பிணைக்கும் அகங்காரிகளுக்குத் தப்புவியும் கர்த்தாவே! - சங் 119/69
3. குழிகளை வெட்டும் அகங்காரிகளுக்குத் தப்புவியும் கர்த்தாவே! - சங் 119/85
4. என்னை ஒடுக்குகின்ற அகங்காரிகளுக்குத் தப்புவியும் கர்த்தாவே! - சங் 119/122
5. இகழுகின்ற அகங்காரிகளுக்குத் தப்புவியும்! - சங் 123/4
6. கண்ணியை மறைவாய் வைக்கும் அகங்காரிகளுக்குத் தப்புவியும்! - சங் 140/5
7. கொள்ளையடிக்கும் அகங்காரிகளுக்குத் தப்புவியும்! - நீதி 16/19
8. அகந்தையாய் பேசாதிருப்பேனாக - 1சாமு 2/3
9. அகந்தையாய் நடத்தாதிருப்பேனாக - நெகே 9/10
10. இதயத்தில் அகந்தை கொள்ளாதிருப்பேனாக - எரே 49/16
11. அகந்தையாய் நடக்காதிருப்பேனாக - தானி 4/37
12. அக்கிரமக்காரரோடே என்னை வாரிக்கொள்ளாதிரும் - சங் 28/3
13. அக்கிரமக்காரருக்கு என்னைத் தப்புவித்து இரட்சியும் - சங் 59/2
14. அக்கிரமக்காரரின் கலகத்துக்கு என்னை விலக்கும் கர்த்தாவே! - சங் 64/2
15. அக்கிரமக்காரரின் சுருக்குகளுக்கு என்னை விலக்கும் - சங் 141/9
16. பொய்யான அற்புதங்களின் பின்னணி ஆவிகளைக் கட்டிப்போடும் - 2 தெச 2/9
17. அக்கிரமக்காரரின் வஞ்சகத்தில் இழுப்புண்டு போகாதிருப்பேனாக - 2பே 3/17
18. எம் பிதாக்களின் அக்கிரமங்களை மன்னித்தருளும் - யாத் 20/5
19. கர்த்தாவே! எம் சபையாரின் அக்கிரமங்களை மன்னித்தருளும் - லேவி 10/17
20. பரிசுத்த ஸ்தலத்திற்கு விரோதமான அக்கிரமங்களை மன்னித்தருளும் - எண் 18/1

**21.** ஊழியத்தைப் பற்றிய அக்கிரமத்தை மன்னித்தருளும் - எண் 18/1

**22.** ஊழியக்காரர் குடும்பத்தார் அக்கிரமத்தை நிவிர்த்தியாக்கும் - 1 சாமு 3/14

**23.** என் நாவின் அக்கிரமங்களை மன்னித்தருளும் - யோபு 6/30

**24.** என் சிறுவயதின் அக்கிரமங்களை மன்னித்தருளும் - யோபு 13/26

**25.** கர்த்தாவே! என் அக்கிரமம் பெரிது. அவைகளை மன்னியும் - சங் 25/11

**26.** அக்கிரம வார்த்தைகளைக் கட்டிப்போடும் - சங் 36/3

**27.** படுக்கையின்மேல் அக்கிரமத்தை யோசிப்போரைக் கட்டிப்போடும் - சங் 36/4

**28.** என் அக்கிரமம் என்னைத் தொடர்ந்து பிடிக்காதிருப்பதாக - சங் 40/12

**29.** அருவருப்பான அக்கிரமங்களைச் செய்யாதிருப்பேனாக -சங் 53/1

**30.** இருதயத்தில் அக்கிரம சிந்தை கொள்ளாதிருப்பேனாக - சங் 66/18

**31.** பூர்வகாலத்து அக்கிரமங்களை நினையாதிரும் - சங் 79/8

**32.** சகல அக்கிரமங்களினின்றும் மீட்டுக் கொள்ளும் - சங் 130/8

**33.** அக்கிரமவிஷயங்கள் என் மேல் வல்லமை கொள்ளாதிருப்பதாக - சங் 65/3

**34.** உமது ஜனத்தின் அக்கிரமத்தை மன்னித்தருளும் - சங் 85/2

**35.** அக்கிரமங்களை எல்லாம் மன்னித்து நோய்களை எல்லாம் குணமாக்கும் - சங் 103/3

**36.** அக்கிரம பாரம் யாவுமகற்றும் கர்த்தாவே - ஏசாயா 1/4

**37.** அக்கிரமத்தோடே மாதப்பிறப்பை ஆசரியாதிருப்பேனாக - ஏசாயா 1/13

**38.** பொருளாசை என்னும் அக்கிரமத்தை விட்டுவிடுவேனாக-ஏசாயா 57/17

**39.** என்னையும் உம்மையும் பிரிக்கின்ற அக்கிரமங்களை விட்டுவிடுவேனாக - ஏசாயா 57/17

**40.** அக்கிரமத்தின் கட்டுகளை ஜெபத்தால் அவிழ்ப்பேனாக - ஏசாயா 58/6

**41.** அக்கிரம விரல்களை மாற்றுவேனாக - ஏசாயா 59/3

**42.** அக்கிரம நினைவுகளை மாற்றுவேனாக - ஏசாயா 59/7

**43.** அக்கிரமத்தின் கறைகளை உம் இரத்தத்தால் கழுவிடும் கர்த்தாவே! - எரே 2/22

44. முன்னோர்களின் அக்கிரமங்களுக்குத் திரும்பாதிருப்பேனாக -எரே 11/10

45. அக்கிரமத்தின் மேல் பசிதாகம் கொள்ளாதிருப்பேனாக-ஓசியா 4/8

46. அக்கிரம உள்ளம் மாற்ற உதவும் - மத் 23/28

47. அவயவங்களை அக்கிரமத்திற்கு அடிமைகளாக கொடாதிருப்பேனாக - ரோமர் 6/19

48. அக்கிரமத்தின் இரகசியத்தைக் கட்டிப்போடும் கர்த்தாவே!-2தெச 2/7

49. எங்கள் அக்கிரமத்தை இனி நினையாதிரும் கர்த்தாவே! - எபி 8/12

50. அக்கினி வல்லமையோடே வெளிப்படும் கர்த்தாவே - யாத் 3/2

51. பரிசுத்த பர்வதத்திலே அக்கினியில் இறங்கும் கர்த்தாவே - யாத் 19/18

52. இரவில் உம் அக்கினி வாசஸ்தலத்தை விட்டுப் பிரியாதிருப்பதாக - உபா 1/33

53. அக்கினி நடுவிருந்து கற்பனைகளை விளம்பும் கர்த்தாவே! - உபா 10/4

54. அக்கினிமயமான பிரமாணம் புறப்படுவதாக - உபா 33/2

55. அக்கினியால் உத்தரவு அருளும் கர்த்தாவே - 1 ராஜா 18/24

56. எம்மைச் சுற்றி அக்கினிமயமான இரதங்களை வைத்திடும் - 2 ராஜா 6/17

57. அக்கினி அம்புகளை அனுப்பும் - சங் 7/13

58. வாயினின்று பட்சிக்கிற அக்கினியை அனுப்பும் - சங் 18/8

59. தியானிக்கையில் அக்கினி மூளுவதாக - சங் 39/3

60. இஸ்ரவேலின் ஒளியானவரே! அக்கினியாய் வெளிப்படும் - ஏசாயா 10/17

61. அக்கினியில் நடக்கும் போது வேகாதிருப்பேனாக - ஏசாயா 43/2

62. பர்வதங்கள் உமக்கு முன்னே உருகும்படி செய்யும் கர்த்தாவே - ஏசாயா 64/2

63. அக்கினியால் மாம்சமானவரோடே வழக்காடும் கர்த்தாவே! - ஏசாயா 66/16

64. உம் உக்கிரம் எம் மேல் அக்கினி போல் எழும்பாதிருப்பதாக-எரே 4/4

65. உம் வார்த்தைகளை அக்கினியாக்கும் - எரே 5/14

66. உம் வார்த்தை அக்கினி போல என் இதயத்திருப்பதாக-எரே 20/9

67. என் எலும்புகளில் அக்கினி போல உம் வார்த்தை இருப்பதாக-எரே 20/9

68. அக்கினி நடுவிலே உலாவி அக்கினி தாக்காது காத்திடும்-தானி 3/25
69. சாத்தானின் அக்கினி எம் மேல் பெலஞ்செய்யாதிருப்பதாக-தானி 3/27
70. அக்கினியால் நியாயம் விசாரித்திடும் - ஆமோஸ் 7/4
71. யாக்கோபு வம்சத்தாரை அக்கினியுமாக்க வாரும் - ஒப 1/18
72. எரிச்சலின் அக்கினியால் யுத்தம் செய்யும் - செப் 1/18
73. எம்மைச் சுற்றிலும் அக்கினி மதிலாயிரும் - சகரி 2/5
74. அக்கினியினால் ஞானஸ்நானம் தாரும் - மத் 3/11
75. பூமியின் மேல் உம் பரிசுத்த அக்கினியைப் போடும் கர்த்தாவே! - லூக் 12/49
76. அக்கினிமயமான நாவுகளால் அந்தகார வல்லமைகளைச் சுட்டெரித்திடும் - அப் 2/3
77. சாத்தானின் அக்கினியின் உக்கிரத்தை அவித்துப்போடும் கர்த்தாவே - எபி 11/34
78. அக்கினி மலையாய் வாரும் கர்த்தாவே! - எபி 12/18
79. பட்சிக்கிற அக்கினியாய் கடந்து வந்து சுட்டெரித்திடும் - எபி 11/34
80. ஏழு ஆவிகளின் 7 அக்கினி தீபவல்லமை இறங்குவதாக - வெளி 4/5
81. அக்கினிமேல் அதிகாரமுள்ள தூதனை அனுப்பும் கர்த்தாவே! - வெளி 14/18
82. அக்கினிமயமான தூதர்களை அனுப்பும் கர்த்தாவே!-யோவேல்2/2,3
83. கேருபீன்கள் நடுவே இருக்கிற அக்கினித்தழல் இறைக்கப்படுவதாக - எசே 10/2
84. பலிபீட நெருப்புத்தழல் இறைக்கப்படுவதாக - ஏசாயா 6/6
85. கர்த்தரின் சத்தம் அக்கினி ஜுவாலைகளைப் பிளப்பதாக -சங் 29/7
86. உமது ஊழியக்காரரை அக்கினி ஜுவாலைகளாகச் செய்யும்-சங் 104/4
87. என் நேசத்தின் தழல் அக்கினி தழலாய் இருப்பதாக - உன் 8/6
88. அக்கினி ஜுவாலை என் பேரில் பற்றாது இருப்பதாக-ஏசாயா 43/2
89. சிங்காசன அக்கினி ஜுவாலை வல்லமையை அனுப்பும்-தானி 7/9
90. உம் கண்களின் அக்கினியை அனுப்பும் - வெளி 1/14
91. யோசேப்பு வம்சத்தாரை அக்கினி ஜுவாலையாக்கும் - ஒபதி 1/18
92. இரவிலே அக்கினி ஸ்தம்பம் விலகாதிருப்பதாக - நெகே 9/19

93. கர்த்தாவே! என் அங்கலாய்ப்பைக் கேளும் - ஆதி 16/11

94. ஆரோனின் அங்கி மேலிறங்கும் தைலம் போல் உம் ஆவி எம்மேல் இறங்குவதாக - சங் 133/2

95. வெள்ளை அங்கி எமக்கருளும். பரிசுத்த அலங்காரம் அருளும் - வெளி 6/11

96. என் வேலையில் அசதியாயிராதிருப்பேனாக - நீதி 18/9

97. உம் வேலையில் அசதியாய் இராதிருப்பேனாக - எரே 48/10

98. அசதியாயிராமல் வாக்குத்தத்தங்களை விசுவாச ஜெபத்தால் பெறுவேனாக - எபி 6/11

99. அநியாயத்தைத் தண்ணீரைப் போல குடிக்காதிருப்பேனாக-யோபு 15/16

100. உமது வாசஸ்தலத்தை அசுத்தப்படுத்துவோரைக் கட்டிப்போடும் - சங் 74/7

101. உமது பரிசுத்த ஸ்தலத்தை அக்கினிக்கு இரையாக்க எண்ணுவோரைக் கட்டிப்போடும் கர்த்தாவே! - சங் 74/8

102. என் அசுத்த உதடுகளைச் சுத்தமாக்கும் - ஏசாயா 6/5

103. போஜனபீடங்கள் சுத்தமாயிருக்க வாசல்கள் திறந்திடும்-ஏசாயா 28/8

104. அசுத்தன் இனி எம்மிடத்தில் வராதிருப்பானாக - ஏசாயா 52/1

105. அசுத்தமானதைத் தொடாது இருப்பேனாக - ஏசாயா 52/11

106. உம் பீடத்தின் மேல் அசுத்தமான அப்பம் படைக்கப் படாதிருப்பதாக - மல்கியா 1/7

107. கர்த்தருடைய பந்தி அசுத்தமானது என்று சொல்லாதிருப்பேனாக - மல் 1/12

108. விக்கிரகத்துக்குப் படைத்த அசுசியானவைகளுக்கு விலகியிருப்பேனாக - அப்போஸ்தலர் 15/20

109. மாம்சத்தின் அசுத்தம் யாவுமகற்றும் - II கொரி 7/1

110. ஆவியின் அசுத்தம் யாவுமகற்றும் - II கொரி 7/1

111. சகலவித அசுத்தங்களுக்கு விலகி ஜீவிப்பேனாக - எபே 4/19

112. மகாபாபிலோனின் அசுத்தங்களில் சிக்கிவிடாதிருப்பேனாக - வெளி 17/5

113. எம்மைப் பற்றிய அச்சம் சகல மிருகங்களுக்குமிருப்பதாக-ஆதி 9/2

114. கர்த்தாவே! நீரே எங்கள் அச்சமாயிருப்பீராக - ஏசாயா 8/13

115. ஆவியென்னும் அச்சாரத்தை எமக்குத் தந்திடும் - 2 கொரி 1/22

116. சூரியன் அஸ்தமிக்கும் திசை தொடங்கி கர்த்தரின் நாமத்திற்கு பயப்படுவார்களாக - ஏசாயா 59/19

117. சூரியன் அஸ்தமிக்கும் முன்னர் என் எரிச்சல் தணிவதாக-எபே 4/26

118. தேவாலய அஸ்திபாரங்கள் பலமாயிருப்பதாக - எஸ்றா 6/3

119. அஸ்திபாரத்தை நிர்மூலமாக்கும் கிரியைகளைக் கட்டிப் போடும் - சங் 11/3

120. பரிசுத்த பர்வதங்களில் உம்முடைய அஸ்திபாரம் இருப்பதாக - சங் 87/1

121. நித்திய அஸ்திபாரமாய் எமக்கிருந்திடும் கர்த்தாவே! - நீதி 10/25

122. எங்கள் அஸ்திபாரமாக, சீயோனில் வைக்கப்பட்ட கல்லாய் செயல்படும் - ஏசா 28/16

123. ஆலயம் அஸ்திபாரப்படுவதாக - ஏசாயா 44/28

124. தலைமுறை தலைமுறையாயிருக்கும் அஸ்திபாரமாய் வாரும் - ஏசாயா 58/12

125. அஞ்சனம் பார்க்கும் ஆவிகளைக் கட்டிப்போடும் - லேவி 20/6

126. அஞ்சனம் பாராதிருப்பேனாக - 1 சாமு 28/8

127. விக்கிரக ஆராதனை செய்யாதிருப்பேனாக - சங் 135/15

128. மரத்துக்கு ஆராதனை செய்யாதிருப்பேனாக - எசே 20/32

129. பிசாசுகளுக்கு பயிடாதிருப்பேனாக - 1 கொரி 10/20

130. மோக இச்சைக்குட்படாதிருப்பேனாக - 1 தெச 4/4

131. திரிகைக்கல்லை அடகு வாங்காதிருப்பேனாக - உபா 24/6

132. விதவையின் வஸ்திரத்தை அடகு வாங்காதிருப்பேனாக-உபா 24/17

133. தரித்திரனின் போர்வையை அடகு வாங்காதிருப்பேனாக - யோபு 24/9

134. சகோதரர் கையில் அடகு வாங்காது இருப்பேனாக - யோபு 22/6

135. நல்ல முதிர்வயதில் அடக்கம் பண்ணப்படுவேனாக - ஆதி 15/15

136. பரிசுத்தவான்கள் அடக்கம் பண்ணப்படும் இடத்தில் அடக்கம் பண்ணப்படுவேனாக - ஆதி 25/10

137. கர்த்தருடைய பிள்ளைகளால் அடக்கம் பண்ணப்படுவேனாக - மத் 14/12

138. தீர்க்கதரிசிகளுடைய ஆவிகள் தீர்க்கதரிசிகளுக்கு அடங்கியிருப்பதாக - 1 கொரி 14/32

139. எங்கள் மனுஷ ஆவிகளின் பிதாவானவரே! மனுஷ ஆவிகளைப் படைத்தவரே! எம் ஆவிகளைப் படைத்தவரே! எம் ஆவிகளை வெளிச்சமாக்கும் - எபி 12/9

140. மரணத்துக்கும் எனக்கும் ஒரு அடி இருந்தாலும் தப்புவியும் - 1 சாமு 20/3

141. உமது அடிச்சுவடுகளைத் தொடருவேனாக - 1 பேது 2/21

142. எகிப்தியரின் அடிகளுக்குத் தப்புவியும் - யாத் 2/11

143. பிள்ளைகளால் அடிகளுக்கு விலக்கும் - யாத் 21/15

144. உமது அடிகளுக்குத் தப்புவியும் - 1 நாளா 13/10, ஓசி 6/1

145. நதி அடிக்கப்பட்ட போது இரத்தமானது கர்த்தாவே! பொல்லாத ஆவிகளை பெலனற்றுப் போகப் பண்ணும் - யாத் 7/20

146. எ கா தண்ணீரை அடித்தவுடன் பிரிந்தது. கர்த்தாவே! பொல்லாத ஆவிகளின் வல்லமையை அடக்கும் - 2 ரா 2/14

147. ஆரோன் கோலால் புழுதி மேல் அடித்த போது பேன்கள் வந்தது. உம் விர ன் வல்லமையை வெளிப்படுத்தும். - யாத் 8/17

148. ஊசா, ஏரோதை அடித்தவரே! யாவே மேக்காவாய் வாரும்.

- 1 நாளா 13/10, அப். 12/23

149. ஈசாயென்னும் அடிமரத்தி ருந்து தோன்றிய துளிரே! எம் வாழ்வில் வெளிப்படும் - ஏசாயா 11/1

150. சகோதரரிடம் அடிமைத்தனத்திற்குத் தப்புவியும் - ஆதி 9/25

151. பார்வோனிடம் அடிமைத்தனத்திற்குத் தப்புவியும் - ஆதி 47/25

152. கடன் அடிமைத்தனத்திற்குத் தப்புவியும் - நீதி 22/7

153. மனுஷரிடம் அடிமைத்தனத்திற்குத் தப்புவியும் - 1 கொ 7/23

154. மரியாளைப் போல உமக்கே அடிமையாய் இருப்பேனாக - லூக் 1/38

155. பாவத்துக்கு அடிமையாகாதிருப்பேனாக - யோவான் 8/34

156. நீதிக்கு அடிமையாவேனாக - ரோமர் 6/18

157. நியாயபிரமாணத்துக்கு அடிமையாகாதிருப்பேனாக - கலா 2/4

158. இவ்வுலக வழிபாட்டுக்கு அடிமையாகாதிருப்பேனாக - கலா 4/3

159. சாத்தானுக்கு அடிமையாயிராமல் உமக்கு புத்திரனாயிருப்பேனாக - கலா 4/7

160. கேட்டுக்கு அடிமையாகாது இருப்பேனாக - 1 பேது 2/19

161. தேவனே! உமக்கே அடிமையாயிருப்பேனாக - 2 பேது 2/19

162. அடிமைத்தன வீடாகிய எகிப்தி ருந்து புறப்படப்பண்ணும் - யாத் 13/3

163. உமது அடியாளின் குமாரனை இரட்சியும் - சங் 86/16
164. கர்த்தாவே சொல்லும், அடியேன் கேட்கிறேன் - 1 சாமு 3/9
165. அடியேனுக்கு ஞானமுள்ள இருதயத்தைத் தாரும் - 1 ராஜா 3/9
166. துணிகரமான பாவங்களுக்கு உமது அடியேனை விலக்கும் - சங் 19/13
167. கோபத்துடன் உமது அடியேனை விலக்கிப் போடாதேயும்-சங் 27/9
168. உமது முகத்தை உமது அடியேனுக்கு மறைக்காதிரும் - சங் 69/17
169. உமது அடியானை நீர் இரட்சியும் - சங் 86/2
170. உம் அடியானின் ஆத்துமாவை மகிழ்ச்சியாக்கும் - சங் 86/4
171. உமது அடியாருக்காகப் பரிதபியும் - சங் 90/13
172. உமது அடியேனோ மகிழ்க்கடவன் - சங் 109/28
173. உமது அடியேனுக்கு அநுகூலமாயிரும் - சங் 119/17
174. உமது வாக்கை அடியேனுக்கு உறுதிப்படுத்தும் - சங் 119/38
175. உமது அடியேனுக்கு நன்மையாகத் துணைநில்லும் - சங் 119/122
176. அடியேன் மேல் உமது முகத்தைப் பிரகாசிக்கப்பண்ணும்-சங் 119/135
177. உமது அடியேனை நியாயத்தீர்க்கப் பிரவேசியாதேயும் - சங் 143/2
178. உமது அடியேனைப் பட்டயத்துக்குத் தப்புவியும் - சங் 144/10
179. அடுப்புகளில் தவளை ஏறும் சாபம் வராதிருப்பதாக - யாத் 8/3
180. பத்து ஸ்திரீகள் ஒரே அடுப்பில் அப்பம் சுடுகிற நிலமைகள் வராதிருப்பதாக - லேவி 26/26
181. அடுப்பின் நெருப்பு அவியாதிருப்பதாக - யோபு 18/5
182. அடுப்பில் நெருப்பு எடுக்க ஓடு அகப்படாதபடி கொடிய பாவிகளோடே யுத்தம் பண்ணும் - ஏசா 30/14
183. பஞ்சத்தால் தோல் கறுத்துப் போகிற நிலமைகளுக்குத் தப்புவியும் - புலம்பல் 5/10
184. அநாதி தேவனே! எமக்கு அடைக்கலமருளும் - உபா 33/27
185. நீரே என் உயர்ந்த அடைக்கலமாயிரும் - சங் 59/9
186. எனக்கு பலத்த அடைக்கலமாயிரும் - சங் 71/7
187. தலைமுறை தலைமுறையாய் எமக்கு அடைக்கலமாயிரும்-சங் 90/1
188. எம் பிள்ளைகளுக்கு அடைக்கலமாயிரும் - நீதி 14/20
189. பெருவெள்ளத்துக்குத் தப்பும் அடைக்கலமாயிரும் - ஏசாயா 25/4
190. உமது பீடங்களண்டை இடமருளும் - சங் 84/3

191. அடைக்கலான் குருவிகளைப் பார்க்கிலும் எம்மைப் போஷித்திடும் - மத் 10/31

192. அடைப்புகளைத் தகர்த்துப் போடாதிரும் - சங் 80/12

193. உம் இரத்த அடையாளம் போடும் கர்த்தாவே! - ஆதி 4/15

194. நோவா கால வெள்ளம் இனி வருவதில்லை என்று விசுவாசிப்பேனாக - ஆதி 9/13

195. ஞானஸ்நான அடையாளம் பெறுவேனாக - I பே 3/21

196. என்னை நீரே அனுப்பினீர் என்பதற்கேற்ற அடையாளங்களைக் காட்டும் - யாத் 3/12

197. உமது கோல் வல்லமைகளைக் காட்டும் கர்த்தாவே! - யாத் 4/17

198. எங்கள் வீடுகளில் உம் இரத்தத்தின் அடையாளத்தைப் போடும் கர்த்தாவே - யாத் 12/13

199. ஓய்வுநாள் ஆசரிப்பு என்ற அடையாளத்தை விடாதிருப்பேனாக - யாத் 31/13

200. கோராகின் கூட்டத்தாரோடே யுத்தம் பண்ணும் - எண் 26/10

201. உம் வார்த்தைகள் என்னில் அடையாளமாயிருப்பதாக - எண் 6/8

202. அநுகூலமாக ஒரு அடையாளத்தைக் காட்டும் - சங் 86/17

203. இஸ்ரவேலில் அடையாளங்களாய் வைத்திடும் கர்த்தாவே - ஏசாயா 8/18

204. எம் நெற்றிகளில் உம் நாம அடையாளம் போடும் - எசே 9/4

205. விசுவாசி என்பதன் அடையாளங்கள் என்னில் வெளிப்படுவதாக - மாற் 16/17

206. அடையாளங்களால் உம் வசனங்களை உறுதிப்படுத்தும்-மாற் 16/20

207. சூரிய சந்திர நட்சத்திரங்களில் அடையாளங்கள் காட்டும் - லூக் 21/25

208. அந்நியபாஷை அடையாளம் என்னில் காணப்படுவதாக - 1கொரி 14/22

209. அப்போஸ்தலர்க்குரிய அடையாளம் வெளிப்படுவதாக - 2 கொரி 12/12

210. தாயின் வயிற்றிலிருந்தே அண்ணகர்களாக உள்ளவர்களை உமக்கென்று பயன்படுத்தும் - மத் 19/12

211. உமக்கென தங்களை அண்ணகர்களாக்கினைவர்களை உமக்கென வல்லமையாய் பயன்படுத்தும் - மத் 19/12

212. சிவந்த சமுத்திரத்தை அதட்டி பாதை திறந்தருளும் கர்த்தாவே - சங் 106/9

**213.** அசுத்த ஆவிகளை அதட்ட அதிகாரம் தாரும் கர்த்தாவே-லூக் 9/42

**214.** அதரிசனமானவரே! உம்மைத் தரிசிப்பது போன்ற விசுவாசமருளும் - எபி 11/27

**215.** ஜீவனுக்கேதுவாய் வார்த்தைகளை அறிக்கை பண்ணுவேனாக - நீதி 18/21

**216.** என் பிரயாசத்தில் மகிழப்பண்ணும் - பிர 5/19

**217.** போதிக்க அதிகாரப்படுத்தும் - மத் 7/28

**218.** நோய்களை நீக்க அதிகாரப்படுத்தும் கர்த்தாவே - மாற் 6/7

**219.** பிசாசுகளைத் துரத்த அதிகாரப்படுத்தும் கர்த்தாவே! - மாற் 3/15

**220.** சத்துருவின் சகல வல்லமைகளை மேற்கொள்ள அதிகாரப்படுத்தும் - லூக் 10/19

**221.** உம்முடைய பிள்ளைகளாகும்படி அதிகாரமளியும் - யோ 1/12

**222.** உம் சித்தம் செய்திட அதிகாரப்படுத்திடும் கர்த்தாவே - 1 கொ 9/4,5,6

**223.** பொல்லாத ஜாதிகள் மேல் அதிகாரமளித்திடும் - வெளி 2/26

**224.** வானத்தையடைக்க அதிகாரம் அருளும் கர்த்தாவே - வெளி 11/6

**225.** அநேகத்தின் மேல் அதிகாரியாக்கும் - மத் 25/21

**226.** அதிகாலையில் சகாயம் பண்ணும் - சங் 46/5

**227.** அதிகாலையில் விழித்துக் கொள்வேனாக - சங் 57/8

**228.** அதிகாலையில் உமது கிருபையைக் கேட்கப்பண்ணும் - சங் 143/8

**229.** அதிகாலையில் ஆலயத்துக்குச் செல்ல உதவும் - உன் 7/12

**230.** அதிகாலையில் எமக்கு வெளிப்படும் - மாற் 16/19

**231.** அதிகாலமே ஜீவவார்த்தைகளைப் போதிக்க அனுக்கிரகமருளும் - அப் 5/21

**232.** எங்கும் செய்யாத அதிசயங்களைச் செய்திடும் - யாத் 34/10

**233.** எண்ணிமுடியாத அதிசயங்களைச் செய்திடும் - யோபு 5/9

**234.** உமது கிருபையை அதிசயமாய் விளங்கப் பண்ணும் - சங் 31/21

**235.** உமது பூர்வ அதிசயங்களைச் செய்யும் கர்த்தாவே! - சங் 77/11

**236.** ஆழத்திலே அதிசயங்கள் செய்யும் - சங் 107/24

**237.** வேதத்திலுள்ள அதிசயங்களைச் செய்யும் - சங் 119/18

**238.** ஒருவராய் பெரிய அதிசயங்களைச் செய்திடும் கர்த்தாவே! - சங் 136/4

**239.** வானத்திலும் பூமியிலும் அதிசயங்களைச் செய்திடும்-யோவேல் 2/30

**240.** பார்வோனின் அதிபதிகள் மேல் வெற்றியருளும் - யாத் 15/4

**241.** மீதியானின் அதிபதிகள் மேல் வெற்றியருளும் - நியா 7/25

**242.** பெலிஸ்தரின் அதிபதிகள் மேல் வெற்றியருளும் - நியா 16/8

**243.** தீருவின் அதிபதி மேல் வெற்றியருளும் - எசே 28/2

**244.** வடதிசை அதிபதிகள் மேல் வெற்றியருளும் - எசே 32/30

**245.** அதிபதி கோகே மேல் வெற்றியருளும் - எசே 39/1

**246.** பெர்சியா அதிபதி மேல் வெற்றி தாரும் - தானி 10/13

**247.** கிரேக்க அதிபதி மேல் வெற்றி தாரும் - தானி 10/20

**248.** என்னைக் கொண்டு அதிபதிகளை நொறுக்கும் - எரே 51/23

**249.** பொல்லாத அதிபதிகள் சிறைப்பட்டுப் போவார்களாக - ஆமோஸ் 1/15

**250.** இரட்சிப்பின் அதிபதியாய் செயல்படும் - எபி 2/10

**251.** பூமியின் இராஜாக்களுக்கு (பூமியின் பரிசுத்தவான்களுக்கு) அதிபதியாய் செயல்படும் - வெளி 1/5

**252.** உம் சேனைகளுக்கு அதிபதியாய் வந்திடும் - யோசுவா 5/14

**253.** அத்தியிலைகளை (சுயநீதியை) உடுத்தாதிருப்பேனாக - ஆதி 3/7

**254.** அத்தி துளிர்விடாமற் போனாலும் உமக்குள் களிகூருவேனாக - ஆப 3/17

**255.** நல்லகனிகள் தருகின்ற நல்லமரமாக மாற்றும் - மத் 7/16

**256.** பொல்லாத ஆவிகளைச் சபிக்கும் அதிகாரமருளும் - மாற் 11/21

**257.** அத்திமரக் காய்கள் உதிர்வது போல வானமண்டலப் பொல்லாத ஆவிகள் உதிர்வதாக - வெளி 6/13

**258.** அநாதி தேவனே! உம்மை அநாதியாய் ஸ்தோத்திரிப்பேனாக - சங் 41/13

**259.** அநாதி சிநேகத்தால் சிநேகித்திடும் - எரே 31/3

**260.** அளவிலும் படியிலும் அநியாயம் செய்யாதிருப்பேனாக - லேவி 19/35

**261.** அநியாயத்தை உழுது தீவினையை விதைப்போரைக் கட்டிப்போடும் - யோபு 4/8

**262.** அநியாயத் தீர்ப்பு செய்வோரைக் கட்டிப்போடும் - ஏசாயா 10/2

**263.** அநியாயத்தினால் மேலறைகளைக் கட்டாதிருப்பேனாக - எரே22/14

**264.** வேதத்துக்கு அநியாயம் செய்யாதிருப்பேனாக - செப் 3/4

**265.** அநியாயத்தில் சந்தோஷப்படாதிருப்பேனாக - 1 கொ 13/6

**266.** பணத்தை ஆத்தும ஆதாயப்பணிக்காகச் செலவு பண்ணுவேனாக - லூக் 16/8

**267.** பணவிஷயத்தில் உண்மை உள்ளவனாயிருப்பேனாக - லூக் 16/11

**268.** அநீதத்தின் கூலியை விரும்பாதிருப்பேனாக - அப் 1/18

**269.** அநீதியில் பிரியப்படாதிருப்பேனாக - 2 தெச 2/11

**270.** ஆலயத்தில் செய்ய மனதாய் இருந்ததெல்லாம் அநுகூலமாவதாக - 2 நாளா 7/11

**271.** ஆபத்தில் அநுகூலமான துணையாய் வந்திடும் கர்த்தாவே - சங் 46/1

**272.** ஊழியத்தில் அநுகூலமான கதவு திறக்கப்படுவதாக - 1 கொரி 16/9

**273.** பிரயாச பலனை அநுபவிப்பேனாக - பிர 3/13

**274.** பிரயாசத்தில் மகிழ்ச்சியடைவேனாக - பிர 5/19

**275.** ஏக சிந்தையுள்ளவர்களாக்கும் - ரோ 15/6

**276.** சவுக்கியமருளும் - அப் 24/3

**277.** சகலவித நன்மைகளருளும் - 1 தீ 6/17

**278.** அந்தகாரத்தில் வைக்கப்பட வேண்டியவர்களை வைத்திடும் - ஏசா 9/19

**279.** அந்தக்கரணத்திலே ஞானத்தை வைத்திடும் - யோபு 38/36

**280.** அந்தரங்கமான காரியத்தையும் நியாயத்திலே கொண்டு வாரும் - பிர 12/14

**281.** அந்தி சந்தி மத்தியான வேளையில் தியானிப்பேனாக - சங் 55/17

**282.** அந்நிய புத்திரரின் கைக்கு என்னைத் தப்புவியும் - சங் 144/8

**283.** அந்நியரின் மும்முரத்தைத் தணியப்பண்ணும் - ஏசாயா 25/5

**284.** ஆசாரிய ஊழியத்துக்காக அபிஷேகம் பண்ணும் - யாத் 30/30

**285.** ராஜாவாக அபிஷேகம் பண்ணும் - 1 சாமு 15/17

**286.** தீர்க்கதரிசியாக அபிஷேகம் பண்ணும் - 1 ரா 19/16

**287.** தலையை எண்ணெயால் அபிஷேகம் பண்ணும் - சங் 23/5

**288.** ஆனந்த தைலத்தினால் அபிஷேகம் பண்ணும் கர்த்தாவே-சங் 45/7

**289.** பரிசுத்த தைலத்தினால் என்னை அபிஷேகம் பண்ணும் - சங்89/20

**290.** புது எண்ணெயால் என்னை அபிஷேகம் பண்ணும் - சங் 92/10

**291.** சுவிசேஷம் அறிவித்திட என்னை அபிஷேகம் பண்ணும் - லூக் 4/18

**292.** துன்மார்க்கரின் அபேட்சை அழிவதாக - நீதி 10/28

**293.** வானத்திருந்து அப்பமருளியவரே! போஷியும் - யாத் 16/14

294. அப்பத்தையும் தண்ணீரையும் ஆசீர்வதித்திடும் - யாத் 23/25

295. அப்பம் என்னும் ஆதரவை முறிக்காதிரும் கர்த்தாவே - எசே 5/16

296. எ□ாவை காகத்தைக் கொண்டு போஷித்தவரே! போஷித்திடும் - 1 ராஜா 17/6

297. 5 அப்பத்தைப் பெருகச் செய்தவரே! போஷித்திடும் - மாற் 6/38

298. பிள்ளையின் அப்பமாகிய தெய்வீக சுகமருளிடும் - மாற் 7/27

299. வாழ்க்கைப்படகிலே அப்பமாய் (ஜீவ) வாரும் கர்த்தாவே! - மாற் 8/14

300. அப்பம் பிட்கையில் ஆவிக்குரிய கண்களைத் திறந்திடும் - லூக் 24/35

301. ஜீவ அப்பமே! ஜீவன் தந்திடும் - யோவா 6/33

302. ஒரே அப்பமாய் ஐக்கியப்படுத்தும் - 1 கொ 10/17

303. உம்மோடே ஐக்கியப்படுத்தும் - 1 கொரி 10/16

304. அப்பா பிதாவே என்று கூப்பிடத்தக்கதாக புத்திரசுவிகாரத்தின் ஆவி தந்திடும் - கலா 4/6

305. விசுவாசத்தை வர்த்திக்கப் பண்ணும் - லூக் 17/5

306. கள்ள அப்போஸ்தலர்களைக் கட்டிப்போடும் - வெளி 2/2

307. தேசம் அமரிக்கையாயிருப்பதாக - 2 நாளா 14/1

308. அமரிக்கையோடே ஆகாரம் புசிப்பேனாக - நீதி 17/1

309. அமரிக்கையான வார்த்தையருளும் - பிர 9/17

310. எருசலேமை அமரிக்கையான தாபரமாக்கும் கர்த்தாவே! - ஏசாயா 33/20

311. ஜனங்களின் அமளியை அமர்த்தும் கர்த்தாவே! - சங் 65/7

312. தேசம் அமைதியாயிருப்பதாக - நியா 8/28

313. அமைதலுள்ள ஜீவனம் பண்ணுவேனாக - 1 தீமோ 2/2

314. அமைதலுள்ள குணம் தந்திடும் - 1 பேது 3/4

315. அம்புகளால் (வல்லமைகளால்) அம்பறாத்தூணியை நிரப்புவேனாக - சங் 127/6

316. என்னை உமது அம்பறாத்தூணியில் மூடி வைத்திடும் கர்த்தாவே! - சங் 49/2

317. சிறைப்பட்டுப் போனவர்களின் இரத்தத்தால் உம் அம்புகளை வெறிகொள்ளப்பண்ணும் - உபா 32/42

318. உமது அம்புகளை எய்து அவர்களைக் கலங்கப்பண்ணும்-சங் 18/14

319. அக்கினி அம்புகளை அனுப்பும் - சங் 7/13

**320.** அம்புகளாய் எடுத்து பயன்படுத்தும் - சங் 127/5

**321.** பாபிலோன் மேல் அம்புகளை எய்திடும் - எரே 50/14

**322.** நான் என் அயலானுக்கு நிந்தையானேன். நிந்தை யாவுமகற்றும் - சங் 31/11

**323.** அயலானுக்குத் தீங்கு நினையாதிருப்பேனாக - நீதி 3/29

**324.** ஸ்திரீகள் பொதுசபையில் பேசாதிருப்பார்களாக - 1 கொரி 14/35

**325.** எனக்கு பலத்த அரணாயிரும் - 2 சாமு 22/33

**326.** அரமனைக்குள் சுகமிருப்பதாக - சங் 122/7

**327.** எம் இரத்தம் உம் பார்வைக்கு அருமையாயிருப்பதாக - சங் 72/14

**328.** எம் மரணம் உம் பார்வைக்கு அருமையாயிருப்பதாக - சங் 116/15

**329.** அருமையான வாக்குத்தத்தங்களின்படி ஆசீர்வதியும் - 2 பேது 1/4

**330.** பழுதுள்ளதை காணிக்கையாய் செலுத்தாதிருப்பேனாக-உபா 17/1

**331.** ஸ்திரீகளின் உடைகளை புருஷர் தரியாதிருப்பார்களாக-உபா 22/5

**332.** பொய் உதடுகள் இல்லாதிருப்பேனாக - நீதி 12/22

**333.** அநியாயஞ் செய்யாதிருப்பேனாக - நீதி 16/12

**334.** நீதிமானைக் குற்றவாளியாக்காது இருப்பேனாக - நீதி 17/15

**335.** பாழாக்கும் அருவருப்பைக் கட்டிப்போடும் - தானி 11/31

**336.** இரட்சிப்பை அருளிச் செய்யும் - சங் 85/2

**337.** சத்தியத்தை கச்சை போல கட்டிக் கொள்வேனாக - எபே 6/14

**338.** வெண்கல அலங்கமாக்கும் கர்த்தாவே - எரே 1/18

**339.** இரட்சிப்பினால் அலங்கரியும் - சங் 149/4

**340.** நற்கிரியைகளினால் என்னை அலங்கரிப்பேனாக - 1 தீமோ 2/10

**341.** அமைதலான குணமருளும் - 1 பேது 3/4

**342.** பரிசுத்த அலங்காரமருளும் - 1 நாளா 16/29

**343.** ஞானம் அலங்காரமாயிருப்பதாக - நீதி 4/9

**344.** உம்முடைய கையில் அலங்காரமான கிரீடமாய் மாற்றும்-ஏசா 62/3

**345.** நீரே எங்கள் அலங்காரமாய் இருப்பீராக - ஏசாயா 4/2

**346.** மரண அலைகளுக்குத் தப்புவியும் - 2 சாமு 22/5

**347.** என் ஆத்துமாவே! கர்த்தரை ஸ்தோத்திரி - சங் 104/35

**348.** கர்த்தாவே! ராஜரிகம் பண்ணும் - சங் 146/10

**349.** உயர்த்தப்பட்ட கொம்பாய் வெளிப்படும் - சங் 148/14

350. அவதூறு பண்ணாதிருப்பேனாக - ரோமர் 1/30

351. பொல்லாத காரியம் செய்வதில் புத்திசாலிகளின் புத்தியை அவமாக்கும் - 1 கொரி 1/19

352. அவாந்தர வெளியில் உமக்குப் பாதையுண்டாவதாக-ஏசாயா 40/3

353. இஸ்ரவேலின் அவாந்தர ஸ்தலங்கள் கட்டப்படுவதாக-எசே 36/10

354. அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளோடே பிணைக்கப்படாதிருப்பேனாக - 2 கொரி 6/14

355. வீட்டாரை சரியாக விசாரிப்பேனாக - 1 தீமோ 5/8

356. யாக்கோபின் வாசஸ்தலம் அழகாயிருப்பதாக - எண் 24/5

357. பரிசுத்த அழகு தந்திடும் - சங் 45/11

358. கர்த்தாவே! உமக்குப் பிரியமான சுவிசேஷகனாக மாற்றும்-ஏசா 52/7

359. உமது பரிசுத்தவான்கள் ஆத்துமா பரதீஸில் உம்மோடு வாழட்டும் - சங் 16/10

360. அழிவுக்காகிய பாத்திரம் மேல் பொறுமையாயிருக்கிறீர் என்பதைப் புரிந்து கொள்வேனாக - ரோமர் 9/23

361. நித்திய அழிவுக்குத் தப்புவேனாக - 2 தெச 1/10

362. கர்த்தாவே! என் அழுகையின் குரலைக் கேட்டிடும் - சங் 60/8

363. அழுது கெஞ்சி ஜெபிப்பேனாக - ஓசியா 12/4

364. புறம்பான இருளுக்குத் தப்புவேனாக - மத் 8/12

365. எனக்காகவும் என் பிள்ளைகளுக்காகவும் அழுவேனாக-லூக் 23/28

366. அழுகிறவர்களோடே அழுவேனாக - ரோமர் 12/15

367. இதயக்கதவைத் தட்டியவுடனே திறப்பேனாக - உன் 5/3

368. சுயநீதியைச் சார்ந்து விடாதிருப்பேனாக - ஏசாயா 64/6

369. இரத்த ஊற்றினால் எம் அழுக்கு வஸ்திரத்தைக் கழுவும் - சகரி 13/1

370. சகலமும் நன்மைக்கேதுவாய் நடப்பதாக - ரோ 8/28

371. உம் பெலனும் உம் ஞானமும் தந்திடும் - 1 கொ 1/24

372. உம் அழைப்பின்படி செயல்படுவேனாக - அப் 13/2

373. பரிசுத்தம் மேல் பரிசுத்தம் வாஞ்சிப்பேனாக - 1 தெச 4/7

374. நித்திய ஜீவனைப் பற்றிக் கொள்வேனாக - 1 தீமோ 6/12

375. அளவில்லா ஆவியானவரே! எம்மை உம் ஆவியால் நிரப்பும் - எசே 40/13

376. அளக்கத்தக்கவர்களுக்குச் சரியானபடி அளப்பேனாக - மத் 7/2

377. உம்மை அறிக்கை பண்ணுவேனாக - லூக் 12/8

378. பாவ அறிக்கை செய்வேனாக - மாற் 1/5
379. என் குற்றங்களுக்காக மன்னிப்பு கேட்கும் குணமருளும் - யாக் 5/16
380. அறியாமையினால் செய்த பாவங்களை மன்னியும், கர்த்தாவே - எண் 15/24
381. அநேகருக்கு அறிவை உணர்த்தும் கருவியாக பயன்படுத்தும் -தானி 11/33
382. நாட்களை எண்ணும் அறிவைத் தந்திடும் கர்த்தாவே - சங் 90/12
383. நல்யுக்தியான அறிவைத் தந்திடும் - நீதி 8/12
384. பரிசுத்தரின் அறிவை அருளும் - நீதி 9/10
385. அறிவினால் தப்புவேனாக - நீதி 11/9
386. அறிவை உணர்த்தும் வசனம் தந்திடும் - 1 கொரி 12/8
387. உம் சித்தம் அறிகின்ற அறிவு ஈந்திடும் - கொலோ 1/9
388. சத்தியத்தின் அறிவை அடைவேனாக - 1 தீமோ 2/4
389. ஓரப்பயிரை தீர அறுக்காதிருப்பேனாக - லேவி 19/9
390. அறுப்பின் முதற்பலனை காணிக்கையாய் கொடுப்பேனாக-லேவி23/10
391. தீவினையை விதைப்போர் அதை அறுப்பார்களாக - யோபு 4/8
392. பெருக விதைப்பேனாக. பெருக அறுப்பேனாக - 2 கொரி 9/6
393. ஆவிக்கென விதைப்பேனாக - கலா 6/8
394. அறுப்புக்காலத்தில் தூங்காதிருப்பேனாக - நீதி 10/5
395. பழிவாங்காது இருப்பேனாக - மத் 5/39
396. கர்த்தரின் பிள்ளைகளை அற்பமாய் எண்ணாதிருப்பேனாக - மத் 18/10
397. உம்முடைய சிட்சைகளை அற்பமாய் எண்ணாதிருப்பேனாக - எபி 12/5
398. அற்புதமான ஒரு அதிசயம் செய்திடும் - ஏசா 29/14
399. அற்புதம் செய்கிற பிசாசின் ஆவிகளைக் கட்டிப்போடும்-வெளி 16/14
400. அன்பின் கயிறுகளால் இழுத்துக் கொள்ளும் - ஓசி 11/4
401. தேவ அன்பால் இதயத்தை நிரப்பும் கர்த்தாவே - ரோமர் 5/5
402. அன்பினால் ஊழியம் செய்வேனாக - கலா 6/13
403. அன்பில் பரிசுத்தம் உள்ளவர்கள் ஆக்கும் - எபே 1/4
404. அன்பிலே வேரூன்றுவேனாக - எபே 3/17
405. அன்பினாலே ஒருவரையொருவர் தாங்கிடப் பண்ணும்-எபே 4/2
406. என்னில் அன்புகூருவது போல பிறனில் அன்பு கூருவேனாக - லேவி 19/18
407. உம்மில் அன்புகூர்ந்து நடப்பேனாக - 1 ராஜா 3/3
408. உம் கற்பனைகளைக் கைக்கொள்வேனாக - 1 யோ 5/3

# புதியவெப்ஸைட்

I 1. VISIT OUR NEW WEBSITE
(எங்கள் புதிய வெப்ஸைட்டை அணுகவும்)

2. WEBSITE ADDRESS IS www.hosannahchurch.org
(இணையதள முகவரி: www.hosannahchurch.org)

3. FEATURES INSIDE (உள்ளே)

1. PRAYERS IN ENGLISH (ஆங்கிலத்தில் ஜெபங்கள்)
2. PRAYERS IN TAMIL (தமிழில் ஜெபங்கள்)
3. DAILY BREAD (ENG) (அனுதின மன்னா – ஆங்கிலம்)
4. YOUTH PAGE (வாலிபர் பகுதி –ஆங்கிலம்)
5. MESSAGE FOR THE WEEK (வார செய்தி - ஆங்கிலம்)
6. THOUGHT FOR TODAY (இன்றைய சிந்தனை துளிகள் –ஆங்கிலம்)
7. PROMISE GALLERY (ENG) (வாக்குத்தத்தங்கள் –ஆங்கிலம்)
8. PROPHETIC PAGE (தீர்க்கதரிசன பக்கம்)
9. PRAYER POINTS (ஜெபக்குறிப்புகள்)
10. FREQUENTLY ASKED QUESTIONS
(அடிக்கடி கேட்கப்படும் கேள்வியும் பதிலும்)

---

# பெண்கள் எழுப்புதல் ஜெபம்

## "Eu £Úx¥LúW Eu SôVLo'' - HNôVô 54/5

**இடம் : ஓசன்னா ஆலயம், பணகுடி**

**நாள் : 18 – 8 – 2010 புதன் கிழமை**

**நேரம் : காலை 10 மாலை 3 மணி வரை**

**சத்தியத்தை அதிகமாக அறியவும், சுவிசேஷம் எப்படி அறிவிப்பது என்பதைப் பற்றி கற்றுக் கொள்ளவும், எப்படி ஆத்தும பாரத்தோடு ஜெபிப்பது என்பதையும் கற்றுக் கொள்ளவும் ஸ்தீரிகளை அன்புடன் இயேசுவின் நாமத்தில் அழைக்கிறோம்.**